**தமிழ் நாடு அரசு**

**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி - காரணீஸ்வரர் கோயில் தெரு முதல் சந்திற்கு "நீதியரசர் திருக்குறள் சி. இராமகிருட்டிணன் தெரு" என்று பெயர் சூட்டுதல் ஆணை வெளியிடுப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (இருபதாண்டு) எண்.91 நாள் 29.9.1999

படிக்கப்பட்டது

அரசாணை (நிலை) 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்30.6.98

மீண்டும் படிக்கப்பட்டது

சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை.3 கடித எண்.நிமஉது/ ந.க.எண்.எஸ்சி3/1737/99 நாள்25.6.99

- - - -

ஆணை

1. படிக்கப்பட்ட அரசாணையில் சாலைகள் மற்றும் தெருக்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கான அல்லது பெயர் சூட்டுவதற்கோ மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு அரசிற்கு முன்மொழிவினை அனுப்புவதை தவிர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதத்தில் திருமதி பானுமதி இராமகிருட்டிணன் அவர்கள் அண்மையில் மறைந்த டாக்டர் திருக்குறள் சி. இராமகிருட்டிணன் சமூக சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, சிறந்த தமிழ் எழுத்தாளர் மற்றும் தமிழ் சமுதாயத்தின் மீது தமிழ் மொழியின் மீதும் பெரும் மதிப்பு வைத்திருந்தார் எனவும், தமிழ் சமுதாயம் சிறந்து விளங்க பெரிதும் பாடுபட்டார் எனவும், சாதியற்ற சமுதாயம் தமிழகத்தில் நிலவிட வேண்டும் என்பது அவரது பேரவா எனவும் டாக்டர் திருக்குறள் சி.இராமகிருட்டிணன் அவர்கள் திருக்குறளின்பால் பெரும் பற்றுக் கொண்டவர்.

குறள் நெறி வாழ்ந்து பலருக்கும் வழிக்காட்டியவர். திருக்குறளின்பால் அவருக்கு இருந்த பெரும் மதிப்பை நினைக்கும் வகையில் தனது இல்லத்திற்கு குறள் இல்லம் என்றும் தனது மகனையும் திருவள்ளுவர் என்றும் அழைத்தவர் எனவும், அன்னார் ஒரு சிறந்த நீதிபதியாக விளங்கியதோடு தமிழகத்தின் நீதி மன்றங்கள் சிறந்த முறையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பததை தன்னுடை பல்வேறு படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார் எனவும், அன்னார் ஒரு சிறந்த எழுத்தாளர் எனவும், எனவே அன்னாது பெயர் அனைவராலும் நினைவில் கொள்ளும் வகையில் அவரது இல்லம் அமைந்துள்ள காரணீஸ்வரர் கோயில் தெரு, முதல் சந்திற்கு நீதியரசர் திருக்குறள் சி.இராமகிருட்டிணன் தெரு என பெயரிட வேண்டும் என்று கோரியிருக்கிறார் என்றும் இதன் தொடர்பாக சென்னை மாநகராட்சி மண்டலம் 10ல் 15.4.99 அன்று நடந்த வார்டு குழு தீர்மான எண்.853ன்படி அரசாணை (நிலை) எண்.1138யை தளர்த்தி பெயர் மாற்ம் செய்ய பாந்துரைத்துள்ளது என்றும், சென்னை மாநகராட்சி மன்றமும் தனது தீர்மான எண்.491/99 நாள 23.8.99ன்படி அரசிற்கு பரிந்துரை செய்து உள்ளது என்றும் தெரிவித்து அரசு ஏற்கனவே வெளியிட்டுள்ள அரசாணை எண். 113 நாள்30.6.98லிருந்து விலக்களித்து காரணீஸ்வரர் கோயில் தெரு முதல் சந்திற்கு " நீதியரசர் திருக்குறள் சி. இராமகிருட்டிணன் தெரு" என பெயர் மாற்றம் செய்து அரசாணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்,

3. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள் 30.6.98ல் சாலைகள் மற்றும் தெருக்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பெயர் சூட்டுவதற்கோ மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு அரசிற்கு முன்மொழிவு அனுப்புவதை தவிர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டது. எனினும் சென்னை மாநகராட்சி ஆணையர் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தபின் காரணீஸ்வரர் கோவில் தெரு, முதல் சந்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவையும் இதுகுறித்த சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானத்தையும் ஏற்று இதனை சிறப்பு நேர்வாக கருதி 1919 சென்னை மாநகராட்சி சட்டம், விதி எண்,228இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நீதியரசர் திருக்குறள் சி,இராமகிருட்டிணன் இல்லம் அமைந்துள்ள காரணீஸ்வரன் கோவில் தெரு முதல் சந்திற்கு நீதியரசர் திருக்குறள் சி. இராமகிருட்டிணன் தெரு என்று பெயர் சூட்டிட சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி.

அரசு செயலாளர்

பெறுநர்

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை,3 (மேயர் மூலமாக)
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை,3
திரு பானுமதி இராமகிருட்டிணன், உரிமையாளர், கரிகாலன் பதிப்பகம், சென்னை

நகல்

அரசுச் செயலர், பொதுத் துறை, சென்னை,9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
ஊரக வளர்ச்சி மற்றும உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது) சிறப்பு துறை, சென்னை,9

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்